முருகப்பெருமான் துணை

**மகான் சனீஸ்வர பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.04.2023, திங்கட்கிழமை

1. மக்களிடை பிறவிப் பயனின்
மாண்பை விளக்க வேண்டி
ஆக்கமுடன் ஞான அவதாரம்
ஆறுமுகனாக நிகழ்த்தி அருளும்
2. அருளும் அரங்க ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறி
வரமென சோபகிருது தகர் திங்கள்
வல்லமையான லாப திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 11 ம் நாள், 24.04.2023 திங்கட்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசி
வழங்குவேன் சனீஸ்வர பகவானும்
சோரமில்லா மக்கள் படை
செகமெல்லாம் உருவாக உரைப்பேன்
4. உரைக்கவே ஊழதன் வழி
உழன்று உலக மாயையுள்
கரைகண்ட மனிதனும் கூட
கட்டாயம் அரங்கன் நாமசெபம்
5. செபம் போற்றி வந்திட
செய்த வினை ஏவல் வினை
அபாயமான கருமவினை
அனைத்தும் அகன்று ஓடியே
6. ஓடியே உலகியல் துன்பங்களை
ஓங்காரம் பாடி விரட்டியே
தேடியே ஞானிகளும் வந்து
தெய்வ நிலை தரும் வண்ணம்
7. வண்ணமதாய் சக்தி பரவி
வாழுகின்ற காலம்தனிலே
எண்ணம் தரும நியாயவழி
எவ்வகையென பரிசோதித்து

8. பரிசோதித்து அரங்கமகான்  பக்தனாய் உயர் சீடனாய்
வருமுலகில் தேறி நின்று வருங்காலம் மாற்றும் ஞானிகளாக
ஆகவே உலகோர் சிறப்பர் ஆறுமுகப் பெருமானை ஏற்று
ஏக சோதி சரவண சோதியென

9. என செபதபம் புரிந்து
எல்லாம் குருவருளே என
ஞானம் பயின்று வர
நல்கி அன்னதானம் தொடர

10. தொடரவே சகல இடர்களை
தேசிகன் துணைபட வென்று
இடரின்றி ஞானிகள் ஆவர்
இயம்பிய அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—